யுள்ள ஆண்டுகளில் எவ்வளவு சம்பாதித்திருக்கக்கூடும் என்பதை எல்லாம் கணக்கிட்டு அவரது குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர் மாதச் சம்பளத்தில் வேலைக்கு இருப்பவர்கள் அல்ல. சுயேச்சையாக கடலில் சென்று சம்பாதிக்கிறவர்கள். சில நேரங்களில் கூடவும் வருமானம் இருக்கும். குறைந்தும் இருக்கும். ஆகவேதான், அதுபோல கணக்குப் பார்க்காது அரசாங்கம் அவரது குடும்பத்தில் இரக்கம் வைத்து ஆயிரம் ரூபாய் உதவி செய்கிறது.

Committee on ceiling on Urban Property

*350 *Q.*—THIRU N. DENNIS
THIRU N. KITTAPPA: } Will the Hon. the Minister for Revenue be pleased to state whether a copy of the Report of the Official Committee for Ceiling on Urban Property will be placed on the Table of the House ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குழுவின் பரிவுரைகள் அரசின் ஆய்வில் உள்ளன. இந்நிலையில் குழுவின் அறிக்கையைப் பேரவை முன் வைப்பது பொது நலனுக்கு ஏற்றதல்ல.

கூடலூர் தாலூகாவில் ஆக்கிரமிப்புகள்

*351 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலூக்காவில் ஆக்கிரமிப்புகளை " முறைப்படுத்தும் " வேலை துவங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், பந்தலூர் பிர்காவைச் சேர்ந்த நெல்லியாளம், சேரங்கோடு, மூனாடு, எருமாடு கிராமங்களில் 30–6–1971 தேதி வரை (பசலி 1380 வரை) அரசுக்குச் சொந்தமான நிலங்களில் ஆக்கிரமிப்புகள் 5,560·08 எக்கரா பரப்பளவுக்கு இருந்தன. இதுவரை 3,174·03 எக்கரா பரப்பளவு நிலம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டு 2,871 நில உடைமைக் குறிப்புகள் (பட்டாக்கள்) வழங்கப்பட்டுள்ளன.